Forts in Thanjavur and Gingee

* 114 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state –

(*a*) the extent of Thanjavur and Gingee forts and their vacant lands ;

(*b*) their present usage ; and

(c) the other places in Tamil Nad where such forts and ramparts are situated ?

தஞ்சை, செஞ்சி கோட்டைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை, செஞ்சி கோட்டைகளும் அதைச் சார்ந்த காலி நிலங்களும் எத்தனை ஏக்கர் ?

(இ) அவை என்ன உபயோகத்தில் இருக்கிறது ?

(உ) இதைப் போன்று தமிழகத்தில் எத்தனை இடங்களில் கோட்டை கொத்தளங்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ)& (இ) : தஞ்சைக் கோட்டைப் பகுதியில் 480 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 385 ஏக்கரில் கட்டிடங்கள், கோயில்கள், சாலைகள் முதலியவை உள்ளன ; எஞ்சிய 95 ஏக்கர் நிலம் தரிசு நிலமாகும்.

செஞ்சியில் ராஜகிரிக் கோட்டையென்றும் கிருஷ்ணகிரி கோட்டையென்றும் இருமலைக் கோட்டைகள் உள்ளன. ராஜகிரிக் கோட்டையும், கட்டிடங்களும் சேர்ந்து 61·36 ஏக்கரும், தரிசு நிலம் 27·52 ஏக்கரும், பட்டா நிலங்கள் 87·97 ஏக்கரும் உள்ளன. கிருஷ்ணகிரி கோட்டையில் மலையுச்சியில் சில கட்டிடங்கள் உள்ளன.

(உ) விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இது போன்று தமிழகத்தில் வேறு என்னென்ன கோட்டை, கொத்தளங்கள் எத்தனை இடங்களில் இருக்கின்றன என்று கடைசியாக ஒரு கேள்வி கேட்டிருக்கிறேன் ? அதற்கு என்ன பதில் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்குத்தான் " விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை " என்ற பதிலாகும்.

Panchalankurichi

* 115 *Q*.—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to convert Panchalankurichi of Tirunelveli District into a place of historical interest ; and

(*b*) whether it will become a place of monument ?

பாஞ்சாலங்குறிச்சி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்ட பாஞ்சாலங்குறிச்சியை வரலாற்று இடமாக்க செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஏதேனும் ஞாபகச் சின்னம் அங்கு வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) : ஆம். பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டியக் கட்டபொம்மன் கோட்டையில் இடிந்த சின்னங்களைப் பாதுக்காக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அந்த இடிந்துபோன சின்னங்கள் உள்ள இடத்தை, கட்டபொம்மனின் வாரிசுதாரர்கள் தங்களிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி அவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கை வந்ததா ? என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. கட்டபொம்மன் இடமென்று ஒரு மண்மேடு இருக்கிறது. அவனுடைய அரண்மனை என்பதற்கான அடித்தளங்கள் காணப்படுகின்றன. அதைப் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டு 26—9—1967ல் ரூபாய் 8,500 ஒதுக்கப்பட்டு, அதை பாதுகாக்கும் பொருளாக அரசாங்கம் ஏற்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

Hosur High School

* 116. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the reason for students' agitation in Hosur High School ;

(*b*) the loss sustained by the people as a result thereof ;

(*c*) whether the students were injured ; and

(*d*) the steps taken by the Government.

ஹோசூர் உயர்நிலைப் பள்ளி

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹோசூர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் கிளர்சிக்குக் காரணம் என்ன ?

(இ) அதனால் பொது மக்களுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

(உ) மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டதா ?

(எ) சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஹோசூர், அரசாங்க (வாரிய) உயர்நிலைப்பள்ளியில் பயிலும் தமிழ் மாணவர்கள் தெலுங்கு துதிப்பாடலுடன் கூட தமிழ் துதிப்பாடலும் சேர்க்கப்பட வேண்டுமென விரும்பினர். இதனைத் தெலுங்கு மாணவர்கள் எதிர்த்தனர்.

(இ) and (உ) : கல்லடி காரணமாக 14 மாணவர்களுக்கும் காவல் துறை தலைமைக் காவலருக்கும் வெளியாள் ஒருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. காவல் நிலையம், அஞ்சல் நிலையம், வட்ட அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முதலியவற்றில் உள்ள தமிழ்ப் பெயர்ப் பலகைகள் உடைக்கப்பட்டன. பொது மக்களின் சொத்துக்களுக்கு எச்சேதமுமில்லை.